# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 106/மா/2022**

**நாள் : 24.8.2022**

திரு. S. திருஞானம்,
சென்னை. – முறையீட்டு மனுதாரர்

செயற்பொறியாளர்,
கோட்டம் - 28, மண்டலம் - 3,
பெருநகர சென்னை மாநகராட்சி. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளி, புதிய எண்.51, பழைய எண்.81, என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் 10.07.2022 நாளிட்ட மனு, 25.07.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 106/2022 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளி, புதிய எண்.51, பழைய எண்.81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் முறையீட்டு மனுவில்,

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 3, கோட்டம் - 28 மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி -1ல் முதல் தெரு அருகில் திரு. M. வரதராஜன் என்பவர் புதிய மனைப் பிரிவை ஏற்படுத்தியுள்ளார். மனைப் பிரிவு அனுமதி எண்.SD/WDCN03/00180/2020 நாள்: 14.03.2020 இம்மனைப் பிரிவில் தானமாக சென்னை மாநகராட்சிக்கு சாலைகள் பொது பயன்பாடு மற்றும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கு நிலம் வழங்கியுள்ளார். இந்த பொதுப்பயன்பாட்டிற்கான நிலங்கள் அருகில் குடியிருப்பவர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை குறித்து புகார் மனு.

மேற்குறிய கோட்டம் -28, மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி 1, முதல் தெரு, பொதுப் பயன்பாட்டிற்கான நிலம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்று கடந்த வருடம் ஜூலை மாதம் சென்னை

மாநகராட்சி செயலி மூலமாக புகார் அளித்திருந்தேன். புகார் எண்.2021-43ICK. இது குறித்து பலமுறை புகார் அளித்தும் உதவிப் பொறியாளர், உதவி செயற்பொறியாளர், செயற்பொறியாளர் மற்றும் வடக்கு வட்டார துணை ஆணையர் இடத்தினை ஆய்வு செய்து, இந்த இடத்தில் சுற்றுச்சுவர் எழுப்பி இந்த இடத்தை பாதுகாப்பதாகவும் கூறியிருந்தனர். மேலும் பொதுப்பயன்பாட்டிற்கான இடத்தை ஒட்டி மனை எண்.16-17 மற்றும் மனை எண்.23-24 மனைகளில் உள்ள கட்டிடங்கள் வரன்முறை மீறியும் விதிகளை மீறியும் பொதுப்பயன்பாட்டிற்கான இடத்தினை ஆக்கிரமித்து கட்டடம் கட்டியுள்ளனர். இது குறித்து புகார் அளித்து இருந்தேன். இது நாள் வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை, மனை பிரிவு உரிமையாளரிடமும் கட்டட உரிமையாளரிடமும் முறைகேடான வழியில் வருவாய் பெற்றுக்கொண்டு சென்னை மாநகராட்சி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் உள்ளனர். இந்த அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு தங்களை கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு, மண்டலம்–3 (மாதவரம்) பெருநகர சென்னை மாநகராட்சி செயற்பொறியாளரிடம் கோரப்பட்டது. அவர், தனது 16.8.2022 நாளிட்ட அறிக்கையில்,**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -3, புதிய வார்டு-27, மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி-2, முதல் தெரு அருகில் உள்ள புதிய மனை பிரிவு அனுமதி எண்.SD/WDCN03/00180/2020 நாள்: 14.03.2020 உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தமிழ்நாடு மின்பகிர்மான கழகத்திற்கும் தானமாக வழங்கிய பொது பயன்பாட்டிற்கான நிலத்தின் அருகே உள்ள மனை எண்கள் 16-17 மற்றும் மனை எண்கள் 23,24 ஆகிய மனைகளில் கட்டடம் கட்டிய கட்டட உரிமையாளர்களால் மேற்படி தானமாக வழங்கப்பட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக மனுதாரரிடமிருந்து கணினி இணைய வழி புகார் கிடைக்கப் பெறவும் மாநகராட்சியின் மண்டலம் -3 அலுவலர்களால் மேற்படி இடம் நேரில் கள ஆய்வு செய்யப்பட்டு தானமாக வழங்கப்பட்ட நிலத்தைச் சுற்றிலும் தகடுகளாலான வேலி அமைக்கப்பட்டு ஆக்கிரமிப்பு ஏற்படாதவாறு பாதுகாக்கப்பட்டு வந்த நிலையில் பின்னர் தகடுகள் அகற்றப்பட்டு இன்றளவும் ஆக்கிரமிப்பு எதுவுமின்றி மாநகராட்சியின் தொடர் கண்காணிப்பின் கீழ் இருந்து வருகிறது.

மேற்படி சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட காலி இடத்திற்கருகே கட்டப்பட்டுள்ள கட்டடத்தின் உரிமையாளரால் அவ்வீட்டிற்குச் செல்வதற்கான சாய்வு தளமொன்று (Ramp) மட்டும் அமைக்கப்பட்டுள்ளது கள ஆய்வில் கண்டறியப்பட்டது. குடியிருப்பு வீடுகளுக்கான அவசியத் தேவையான படிக்கட்டுகள் மற்றும் சாய்தளம் என கருதப்பட்டாலும் முறைமன்ற நடுவம் அறிவுறுத்தும் பட்சத்தில் மேற்படி சாய்வு தளம் சென்னை மாநகராட்சியால் உடனடியாக அகற்றப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்குறிப்பிட்ட கட்டட உரிமையாளர்களின் மீதான காழ்ப்புணர்ச்சி காரணமாக வழங்கப்பட்ட இடமானது ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாகவும் மாநகராட்சி எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் மனுதாரர் அளித்துள்ள புகாரானது தவறானதென்றும் மாநகராட்சி அலுவலர்களை குறைகூறும் வகையிலும் உள்ளதென்றும் கள ஆய்வில் கண்டறியப்பட்டது.

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 10.08.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 10.08.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

> பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 3, கோட்டம் - 28 மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி 1 முதல் தெரு அருகில் திரு. எம். வரதராஜன் என்பவர் புதிய மனைப் பிரிவை ஏற்படுத்தியுள்ளார். இங்கு பொதுப் பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது. அதாவது பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தையொட்டி மனை எண் 15,16, 23 மற்றும் 24 ஆகிய மனைகளில் உள்ள கட்டிடங்கள் வரன்முறை மீறியும், விதிகளை மீறியும் பொதுப்பயன்பாட்டிற்கான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளனர். இது குறித்து புகார் மனுக்களை மாநகராட்சிக்கு அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட மனைகளின் உரிமையாளர்களிடம் முறைகேடாக பணத்தை பெற்றுக்கொண்டு, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை கண்டுகொள்ளாமல் உள்ள மாநகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்திடவும், மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்தை மீட்கவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மேற்கண்ட மனைப் பிரிவில் மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட இடத்திற்கான தானப் பத்திரத்தின் நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 3, செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் 10.08.2022 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. மீண்டும் 17.8.2022 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைக்கப்பட்டனர். 17.8.2022 அன்றைய விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:**

> மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–3 மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி 1 முதல் தெரு அருகில் திரு. வரதராஜன் என்பவரால் அமைக்கப்பட்ட மனைப் பிரிவில், பிளாட் எண் 23 மற்றும் 24–க்கு அருகில் மாநகராட்சி பயன்பாட்டிற்காக ஒரு சிறு பகுதியும், மேலும் பிளாட் எண் 15 மற்றும் 16 ஆகிய பிளாட்களுக்கு அருகில் மின்சார வாரியத்திற்காக ஒரு பகுதி இடமும் மனைப் பிரிவு ஏற்படுத்தும்போது ஒதுக்கப்பட்டது. கடந்த 2021 ஜூன் 12 அன்று மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பை தடுக்கும்பொருட்டு தகரத்தால் ஆன தடுப்பு போடப்பட்டது. ஆனால் மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள பிளாட் எண் 24ல் கட்டப்பட்டுள்ள வீட்டின் முன்பகுதியில் Ramp கட்டி அதன் உரிமையாளர் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமித்துள்ளார். பிளாட் எண் 23ஐ சேர்ந்த உரிமையாளர் மாநகராட்சி இடத்தில் 2 படிக்கட்டுக்களை கட்டியுள்ளார். இதனை அகற்றுமாறு அதன் உரிமையாளரிடம் கோரப்பட்டுள்ளது. உரிமையாளர் 15 நாட்கள் அதாவது 26.8.2022வரை அவகாசம் கோரியுள்ளார். பிளாட் எண் 24–ல் மாநகராட்சி இடத்தில் அமைந்துள்ள Ramp தொடர்பாக 22.7.2021 அன்று Calling for approval Plan Notice அதன்

உரிமையாளருக்கு வழங்கப்பட்டது. அதன் தொடர் நடவடிக்கையாக மேற்கண்ட Ramp-ஐ அகற்ற மாநகராட்சியால் உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் உரிமையாளர் இன்னும் 15 நாட்களில் அகற்றாத பட்சத்தில், மாநகராட்சியாலேயே மேற்கண்ட Ramp அகற்றப்படும் என இம்முறை மன்றத்தில் உறுதியளிக்கின்றோம்.

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–3ன் செயற்பொறியாளரான வி. சின்னதுரையான எனது 16.8.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விளக்கங்களையும் எங்களது மேல் விளக்கமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறைமன்றத்தை கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்நேர்வு தொடர்பான வரைபடத்தின் நகல், Calling for approval Plan Notice நகல் மற்றும் புகைப்படம் ஆகியவற்றை இம்முறை மன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மண்டலம் - 3ன் செயற்பொறியாளரது 16.8.2022 நாளிட்ட அறிக்கை, செயற்பொறியாளர் மற்றும் உதவிப் செயற்பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவற்றிலிருந்து கண்டறியப்படுவன பின்வருமாறு :

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 3, கோட்டம் - 28 மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி 1 முதல் தெரு அருகில் திரு. எம். வரதராஜன் என்பவர் புதிய மனைப் பிரிவை ஏற்படுத்தியுள்ளதும், இங்கு பொதுப்பயன்பாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இடத்தையொட்டி மனை எண் 15,16, 23 மற்றும் 24 ஆகிய மனைகளில் உள்ள கட்டிடங்கள் வரன்முறை மீறியும், விதிகளை மீறியும் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டியுள்ளதும் இது குறித்து மனுதாரர் புகார் மனுக்களை மாநகராட்சிக்கு அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதும் தெரியவருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–3 மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி 1 முதல் தெரு அருகில் திரு. வரதராஜன் என்பவரால் அமைக்கப்பட்ட மனைப் பிரிவில், பிளாட் எண் 23 மற்றும் 24–க்கு அருகில் மாநகராட்சி பயன்பாட்டிற்காக ஒரு சிறு பகுதியும், மேலும் பிளாட் எண் 15 மற்றும் 16 ஆகிய பிளாட்களுக்கு அருகில் மின்சார வாரியத்திற்காக ஒரு பகுதி இடமும் மனைப் பிரிவு ஏற்படுத்தும்போது ஒதுக்கப்பட்டதும், அந்த இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாக புகார் வரப்பெற்றதும் கடந்த 2021 ஜூன் 12 அன்று மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்பை தடுக்கும்பொருட்டு தகரத்தால் ஆன தடுப்பு போடப்பட்டதும், ஆனால் மேற்கண்ட மனைப்பிரிவில் உள்ள பிளாட் எண் 24ல் கட்டப்பட்டுள்ள வீட்டின் முன்பகுதியில் Ramp கட்டி அதன் உரிமையாளர் மாநகராட்சி இடத்தை ஆக்கிரமித்துள்ளதும், பிளாட் எண் 23ஐ சேர்ந்த உரிமையாளர் மாநகராட்சி இடத்தில் 2 படிக்கட்டுக்களை கட்டியுள்ளதும் தெரியவருகிறது. இதனை அகற்றுமாறு அதன் உரிமையாளரிடம் கோரப்பட்டு, உரிமையாளர் 15 நாட்கள் அதாவது 26.8.2022 வரை அவகாசம் கோரியுள்ளதும், பிளாட் எண் 24–ல் மாநகராட்சி இடத்தில் அமைந்துள்ள Ramp தொடர்பாக 22.7.2021 அன்று Calling for approval Plan Notice அதன் உரிமையாளருக்கு வழங்கப்பட்டது. அதன் தொடர் நடவடிக்கையாக மேற்கண்ட Ramp-ஐ அகற்ற மாநகராட்சியால் உத்தரவிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

கடந்த 22.7.2021 அன்று, Tamil Nadu Town and Country Planning Act, 1971-ன் பிரிவு 85-ன் உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 56 (1) மற்றும் 57-ன் கீழ் Stop Work Notice / Notice Calling for

Approval Plan கட்டட உரிமையாளருக்கு கொடுக்கப்பட்டு, பின்னர் மனுதாரர் கட்டட அனுமதியை மாநகராட்சி அலுவலர்களிடம் கொடுத்த பின்னர் 30.10.2021 அன்று கட்டட விதிமீறல்களை சுட்டிக்காட்டி, கட்டப்பட்ட பகுதிகளை அகற்றாவிட்டால் 30 நாட்களுக்குள் விதிமுறைகளின்படி மேற்சொன்ன சட்டத்தின் பிரிவு 57 (4)-ன் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொண்டு விதிமீறல் கட்டடத்தின் பகுதிகள் அகற்றப்படும் என தெரிவித்து நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், அதன் பின்னர் தொடர் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளவில்லை என்பதும் தெரியவருகிறது.

**விரிவான விசாரணைக்குப்பின்னர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:**

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 3 கோட்டம் 28 மாதவரம் கூட்டுறவு நகர் பகுதி 1-ல் முதல் தெரு அருகில் திரு. M. வரதராஜன் என்பவர் புதிய மனைப் பிரிவை ஏற்படுத்தி அதன் ஒரு பகுதி இடத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கும் தானமாக வழங்கியுள்ளார். தானமாக கொடுத்த இடத்தை ஒட்டியுள்ள மனை எண்.16-17 மற்றும் 23-24 மனைகளில் கட்டட அனுமதியை மீறி அங்குள்ள வீட்டு உரிமையாளர்கள் சாய்தளம் (Ramp) அமைத்தும் மற்றும் படிக்கட்டுகள் அமைத்தும் உள்ளனர். 2021 ஜுன் 12 அன்று மாநகராட்சியால் ஆக்கிரமிப்பை தடுக்கும் பொருட்டு தகரத்தால் தடுப்பு போடப்பட்டாலும், மனுதாரர் இது குறித்து மாநகராட்சிக்கு சுட்டிக் காட்டி 10.7.2021 அன்று புகார் அளித்த பின்னர் தான், Tamil Nadu Town and Country Planning Act, 1971-ன் கீழ் 22.7.2021 நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. பின்னர் 30.10.2021 அன்று மேற்சொன்ன சட்டத்தின் கீழ் Lock & Seal demolition Notice கொடுக்கப்பட்டு, பின்னர் சுமார் பத்து மாதங்களுக்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இதனை இம்முறை மன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மனுதாரர் இம்முறைமன்றத்துக்கு 25.7.2022 அன்று மனு செய்த பின்பு, 11.8.2022-க்குப் பின்னர் மண்டலம்-3ன் மாநகராட்சி பொறியாளர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கட்டட உரிமையாளர்கள் மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டியுள்ள சாய்தளம் (Ramp) மற்றும் படிக்கட்டுகளை அவர்கள் 15 நாட்களுக்குள் அகற்றுவதாக உறுதியளித்துள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் அவ்வாறு கட்டட உரிமையாளர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால் மாநகராட்சியாலேயே அவை அகற்றப்படும் என மண்டலம்-3ன் செயற்பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் இம்முறைமன்றத்திற்கு அளித்த உறுதிமொழியை இம்முறைமன்றம் பதிவு செய்கிறது. இம்முறைமன்றத்தில் அளித்த உறுதிமொழியின்படி கட்டட உரிமையாளர்கள் 15 நாட்களுக்குள் ஆக்கிரமிப்புகளை அகற்றாவிட்டால், இம்முறைமன்றத்தின் விசாரணையின்போது உறுதிமொழி அளித்த மாநகராட்சி பொறியாளர்களே ஆக்கிரமிப்பை அகற்ற பொறுப்பேற்று அவ்வாறே செய்யவேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்றாதபட்சத்தில், மண்டலம் 3-ன் செயற்பொறியாளர் மற்றும் உதவிப் பொறியாளர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்குப் பரிந்துரைத்து இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது. மேலும், இதுகுறித்த அறிக்கையினை மண்டலம் -3ன் மண்டல அலுவலர் ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்கவும் இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான மனைப் பிரிவுகள் மற்றும் பொதுமக்களால் மாநகராட்சியின் பொதுப் பயன்பாட்டிற்காக தானமாக அளிக்கப்பட்ட இடங்களை மாநகராட்சிகளின் அனைத்து பகுதி, கோட்டம் மற்றும் மண்டலங்களில் பணியாற்றும் கள அலுவலர்கள் முதல் மண்டல

அலுவலர்கள் வரை அனைவரையும் ஈடுபடுத்தி ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குள் கணக்கெடுப்பு ஒன்றை நடத்தி ஆவணப்படுத்த வேண்டும் என்று இம்முறைமன்றம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்குப் பரிந்துரைத்து ஆணையிடுகிறது. மேலும், தானமாக அளிக்கப்பட்ட மற்றும் மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்துள்ளவர்கள் மீது சட்டப்படியான உரிய குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஆக்கிரமித்துள்ள இடங்களை மீட்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்குப் பரிந்துரைத்து இம்முறைமன்றம் உத்தரவிடுகிறது.

2022–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. திருஞானம்,
புதிய எண்.51, பழைய எண்.81,
திருப்பள்ளி தெரு, சௌகார்பேட்டை,
சென்னை – 600 001.

2) செயற்பொறியாளர்,
கோட்டம் - 28, மண்டலம்–3,
பெருநகர சென்னை மாநகராட்சி,
தட்டான் குளம் சாலை, மாதவரம்,
சென்னை – 600 060.

3) அரசு முதன்மை செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

4) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

25/8/22

செயலாளர்.

25/8/22

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032